முருகப்பெருமான் துணை

உலக மக்கள் அனைவரும் இயற்கை கடவுளின் பிள்ளைகள் ஆவார்கள் உலகமக்கள் அனைவரையும் சகோதர்களாக எண்ணவேண்டும். பாகுபாடு பார்க்கக் கூடாது.

மகான் அகத்திய மகரிஷியின் சீடர்தான் மஸ்தான் சாகிப் ஆவார்கள். மகான் அகத்திய மகரிஷியின் உபதேசத்தினால்தான் மகான் மஸ்தான் அவர்கள் ஞானியானார்கள்.

அகத்திய மகரிஷியின் பெருமைகளை நூறு பாடல்களாக மஸ்தான் அவர்கள் "அகத்தியர் சதகம்" என்ற நூலாக பாடியுள்ளார்கள்.

**மகான் மஸ்தான் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.08.2023, சனிக்கிழமை

1. ஞான வேலியிட்டு உலகினிலே
   ஞானவான்களை படைக்க வந்த
   ஞானதேசிகனே அரங்கா
   ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது நள்ளி திங்கள்
   குறைவிலா இருபானேழ் திகதி காரிவாரம்
   (சோபகிருது வருடம் ஆடி மாதம் 27 ம் நாள், 12.08.2023, சனிக்கிழமை)
   தெரிவிப்பேன் அறிவுரை ஆசியை
   தேசிகன் கேட்க மஸ்தான் யானும்
3. யானுரைக்க அரங்கன் அவதாரம்
   உயர் அவதாரம் கலியினிலே
   இனமத பேதம் கடந்துமே
   எல்லோரும் கடைத்தேற வேண்டுமென
4. வேண்டுமென வரம் பெற்று வந்த
   வேலவன் அம்சம் அப்பா
   தொண்டுவழி உலகமக்கள்
   தொடர்ந்து உன் வழி வருக
5. வருகவே உலகப் பசி பிணி
   வறுமையை விரட்டும் வரத்தை
   தருகின்ற மகா சக்தியாக நீ இருக்க
   தானதரும பலம் பெருகுவதுடன் இனி

6. இனி தருமவானாக உலகோர்
ஏற்றம் தனை அடைந்துமே
கனிவு தயவு கருணைமிக்க
கண்ணியமுள்ள ஞானவான்களாக

7. ஆகவே தேறி நின்று
அகிலத்தை மாற்றுகின்றபடி
மகா சக்திகளாக மாறுவர்
மரணம் மறுமை கடக்கும் வண்ணம்

8. வண்ணமுடன் தன்நிலை தேறி
வள்ளலாய் ஞானியும் ஆகவே
எண்ணமெல்லாம் தருமவழியாக
ஈடில்லா நீதிமான்களாகவும் வாழ்ந்து

9. வாழ்ந்து உலகமாற்றம் தனை
வரம் கூட்டி அரங்கன் நோக்க
தாழ்விலா சேவையாக ஆற்றி
தரணியில் அற்புதம் படைப்பர்

10. படைக்கவே அரங்கன் ஞான
படைகளாக உலகோர் கூடி
தடைகளை மாயைகள்தனை
தகர்த்துமே ஞானவழிசிறந்து

11. சிறந்து ஞானிகள் ஆவர்
சித்திமிகு ஞானயுகம் மாற்றம்
அருந்தவசி அறத்தால் படைப்பர்
அறிவித்த அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—